புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

==========================================================================

# ‘மணல்’ புதினத்தில் ஆற்றுமணல் கொள்ளையும் நதியின் சிதைவும்

க. சத்யஜோதி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் உயராய்வு நடுவம்,
டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை.

முனைவர் ஜெ. நிர்மலா தேவி,
ஆய்வு நெறியாளர், இணைப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு நடுவம்,
டோக் பெருமாட்டி கல்லூரி,
மதுரை.

==========================================================================

ஆய்வுச்சுருக்கம்

பழந்தமிழர்கள் வகுத்த ஐவகை நிலங்களோடும் ஆறு, ஒன்றிக் கலந்துள்ளது. குறிஞ்சி நிலத்தில் பிறப்பெடுக்கும் ஆறு, முல்லை நிலத்தில் நடந்தோடி, பின்பு மருத நிலத்தில் வளம்சேர்க்கும் நதியாய் நடைபயின்று, நெய்தல் நிலத்தில் கடலோடு சங்கமிக்கின்றது. ஆற்றுநீர் பாயாத, வளம் குன்றிய பாலையைத் தவிர பிற நிலங்கள் யாவும் ஆற்று நீரால் செழிப்படைகின்றன. இந்த நன்னீர்ச் செல்வத்தை நம்பியே எல்லா உயிர்களும் வாழுகின்றன. இத்தகைய ஆகப்பெரும் இயற்கைவளத்தின் நிலை, சமகாலத்தில் கேள்விக்குறியாகி விட்டது. மணல்கொள்ளை என்னும் பெயரில் ஆற்றின் அழிவு நாள்தோறும் நடைபெறுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக ஆறுகள் சேர்த்து வைத்திருக்கும் மணலைச், சில ஆண்டுகளில் தீர்த்துவிடுகின்றனர். மேலும், மாந்தரினத்தினரின், இயற்கையின் மீதான ஆதிக்க மனநிலை, பல்வேறு வகையான குற்றங்களுக்குக் காரணமாகிறது. இச்சிந்தனைகளைச் சமூகத்திற்கு வெளிக்காட்டுகின்ற படைப்பு, பா. செயப்பிரகாசத்தின் ‘மணல்’ புதினமாகும். இப்புதினத்தின் வழி வைப்பாற்று மணல்கொள்ளையைத் தோலுரித்துக் காட்டி அதன்மூலம் இயற்கை வளப் பாதுகாப்பை வலியுறுத்துவதாய் இவ்வாய்வு அமைந்திருக்கின்றது. மேலும் வைப்பாறு என்னும் காட்டாற்றின் முக்கியத்துவத்தையும் இதனைச் சார்ந்த உயிரினங்களின் வாழ்வையும் இக்கட்டுரை புலப்படுத்துகின்றது.

திறவுச்சொற்கள்

மணல், பா. செயப்பிரகாசம், வைப்பாறு, ஆற்றுமணல் கொள்ளை, சுற்றுச்சூழல் பாதிப்பு

## முன்னுரை

இலக்கியங்களின் பிறப்பிடம் யாதெனின் சமூக நடப்புகள் என்றே கூறலாம். வெறும் புனைவுக்கதைகளை மட்டுமே எழுதிக் கொண்டிருந்த காலம் சென்று, இன்றைய எழுத்தாளர்கள் சமுதாயச் சிக்கல்களைப் படைப்புகளாகக் காட்டுவதையே குறிக்கோளாக்குகின்றனர். தங்கள் படைப்பாக்கத்தின்வழி இச்சமூகச் சிக்கல்களுக்குத் தீர்வு காண விழைகின்றனர். இத்தகைய படைப்பாளர்களுள் ஒருவர் ‘பா. செயபிரகாசம்’ ஆவார். இவருடைய ‘மணல்’ புதினம் வைப்பாற்று மணல்கொள்ளையை ஆழமாகப் பேசும் ஆவணமாக உள்ளது. இப்புதினத்தில் வெளிப்படுகின்ற சூழலியல் கருத்துகள் கவனத்திற்குரியன. இயற்கையைப் பாலூட்டும் அன்னையாக ஆசிரியர் பலவிதங்களில் மொழிந்துள்ளார். இத்தகைய இயற்கைசார் சிந்தனைகளை விளக்குவதாக இவ்வாய்வு அமைகின்றது. மேலும் ஆற்றுமணல் கொள்ளை, எந்தளவிற்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பதைப் புலப்படுத்தும் வகையிலும் இக்கட்டுரை கட்டமைக்கப்பட்டுள்ளது.

ஆய்வு அணுகுமுறைகள்

சுற்றுச்சூழலுக்கும் இயற்கைக்குமான தொடர்பை ஆய்வு செய்கின்ற 'சூழலியல் திறனாய்வு' அணுகுமுறை இவ்வாய்வில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 'மணல்' புதினம் வெளிப்படுத்துகின்ற கருத்துகளை எடுத்துரைப்பியல் நோக்கில் விளக்கிக் காட்டும் இடங்களில் 'விளக்கவியல் ஆய்வுமுறை' மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பழந்தமிழிலக்கியங்களில் மணல்

ஒரு மொழி, பன்னெடுங்காலமாய் நிலைத்து நிற்பதற்கு ஊன்றுகோலாய்த் திகழ்பவை அம்மொழியின் செழுமையான இலக்கியங்கள் ஆகும். தமிழ் மொழிக்கு இப்பெருமையைத் தரும் இலக்கிய வகைமைகள் ஏராளமானவை. இவற்றுள் மணல் குறித்த சிந்தனைகள் அதிகமாக விரவி வந்துள்ளன. மண்ணிற்கும் மணலிற்கும் வேறுபாடுகள் உண்டு. மண் என்பது அனைத்து மண்வகைகளுக்கும் பொதுவான பெயராகும். மண்ணின் ஒரு பகுதியே மணல் எனலாம். 'மணல், களி மற்றும் வண்டல் ஆகியவற்றின் கூட்டு மண் ஆகும்' https://www.vikatan.com/agriculture/109866-what-do-you-know-about-soil

சங்க இலக்கியங்களில் மணல் பற்றிய பல்வகையான சிந்தனைகளைக் காணமுடிகின்றது.

"நனை முதிர் புன்கின் புந்தாது வெண்மணல்,
வேலன் புனைந்த வெறிஅயர் களம்தொறும்
செந்நெல் வான்பொரி சிதறி அன்ன,
எக்கர் நண்ணிய எம்ஊர் வியன்துறை..." – (குறுந்தொகை, பா. 53)

என்னும் குறுந்தொகை மருதத்திணைப் பாடலில் 'வெண்மணல்' என்று சுட்டப்பட்டுள்ளது. புன்னை மலர்கள், பொரியைப் போல பரந்து கிடக்கும் மணல்பரப்பினை உடைய நீர்த்துறையைப் பாடலில் ஆசிரியர் காட்டுகின்றார்.

ஆற்றுநீர் அடித்து வருவதால் படியும் மண்ணை, வண்டல் மண் என்று கூறுவர். சங்க இலக்கியங்கள் பலவற்றுள் வண்டல் மண் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

வளைபவர் வண்டல் போல் வார் மணல் வடுக்கொள (கலித்தொகை, பா. 29:5)

என்பதில் இளம்பெண்ணின் கூந்தல் நெளிவு போல் ஆற்றுமணல் அமைந்திருக்கின்றது என்று ஆற்றுமணலை வருணிப்பதைக் காணலாம்.

"பலர் ஆடு பெருந்துறை, மலரொடு வந்த
தண்புனல் வண்டல் உய்த்தென" (ஐங்குறுநூறு, பா. 69:3)

பலர் நீராடும் பெரும் துறையில் ஆற்றுநீர், மலரையும் வண்டலையும் இழுத்துச் செல்கிறது என்று ஆற்றின் வண்டல் மண் சார்ந்த செய்தி இடம்பெற்றிருப்பதை அறியலாம்.

'மணல்' புதினம்

சுற்றுச்சூழல் அக்கறையுடன் எழுதப்படும் சமீபத்திய படைப்புகளுள் 'மணல்' புதினம் குறிப்பிடத்தக்கது. இந்நூலினை, வைப்பாற்றின் ஆற்றுமணல் கொள்ளை நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு 'பா. செயப்பிரகாசம்' இயற்றியுள்ளார். ஓர் ஆற்றை உருவாக்க, புவிக்குப் பல்லாண்டுகள் தேவைப்பட்டிருக்குமெனினும் அதன் ஆதிமூலத்தைத் தகர்க்க, மனிதர்களுக்குச் சில ஆண்டுகளே போதும் என்பதை ஆசிரியர் தம் படைப்பில் வெளிப்படுத்தியுள்ளார்.

செண்பகம் மற்றும் பால்வண்ணன் ஆகிய இருவரும் ஆத்தாங்கரை ஜமீன் வரலாறு பற்றி அறிந்துகொள்ளத் துரைக்கண்ணு என்னும் பெரியவரைச் சந்திக்கச் செல்கின்றனர். அவ்வாறு சந்திக்கும் துரைக்கண்ணுவின் வாயிலாக வைப்பாறு அழிந்த கதையையும் அதன் பின்னணியில் ஏற்பட்ட உயிர்ப்பலிகளையும் இப்புதினம் கூறுகின்றது. ஆற்றுக்கு மணலின் தேவை எத்தகையது என்பது குறித்து ஆழமாக விளக்குவதாக 'மணல்' புதினம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

வைப்பாற்றின் வளம்

தமிழர்கள் வகுத்த ஐவகை நிலங்களுள் செழிப்பான நிலம் மருதநிலம் ஆகும். இதற்குக் காரணம் மருதநிலம் முழுவதும் ஆற்றுநீர் வளத்தைக் கொண்டிருத்தலாகும். "மருதநிலம் ஆற்றுப்பாய்ச்சல் கொண்டிருந்தது...நீர்வளம் மிகுந்திருந்ததால் நிலவளமும் உண்டாயிற்று." (ஆற்றங்கரை நாகரிகம், ப. 104) இவ்வளத்தினாலேயே ஆற்றங்கரையில் சிறந்த நாகரிகங்கள்

தோன்றின என்று கூறுகிறார் மா. இராசமாணிக்கம். இவ்வாறு, ஆண்டு முழுவதும் ஓடிக்கொண்டிருக்கும் வற்றாத நதிகளால் மட்டுமே வேளாண்மை செழிப்படைவதில்லை. பருவகாலத்தில் மட்டும் ஊற்றெடுக்கும் காட்டாறுகளினைச் சார்ந்து, வளம்பெறும் ஊர்கள் இன்றளவும் அமைந்திருக்கின்றன. அத்தகைய காட்டாறுகளில் ‘வைப்பாறு’ குறிப்பிடத்தகுந்தது. “தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் தொகுதிக்கு உட்பட்ட 250 கிராமங்களுக்கு நீராதாரமாக இருப்பது வைப்பாறாகும். கேரள மாநிலத்தில் துவங்கி விருதுநகர் மற்றும் நெல்லை மாவட்டங்களின் வழியாக சென்று தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள வைப்பாறு என்ற கிராமத்திலுள்ள கடல்பகுதியில் கலக்கிறது.” (ஓலமிடும் ஆற்றுமணல்) எனப் ப. திருமலை, தம்முடைய ஓலமிடும் ஆற்றுமணல் நூலில் வைப்பாற்றினைக் குறித்துப் பதிவுசெய்துள்ளார். வைப்பாறு, தமிழகத்தில் விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களின் வேளாண் மற்றும் குடிநீர்த்தேவையைப் பூர்த்தி செய்யும் வளமை மிக்க ஆறு என்பதை இக்கருத்தின் மூலம் அறியமுடிகின்றது.

‘மணல்’ புதினத்தில் “சாத்தூருக்கு அருகிருந்து உற்பத்தியானாலும் அது ஒற்றை ஆறு இல்லை. ஏழெட்டு மகரந்த ஓடைகளின் கலப்பு வைப்பாறு” (மணல், ப. 27) என வைப்பாற்றின் இயல்பை ஆசிரியர் கூறியுள்ளார். மேலும் “மழையடிப்புக் காலத்தில் வைப்பாறு என்கிற காட்டாறு தாறுமாறாகப் பெருக்கெடுத்தோடும் போது தீராநதித் தோற்றம் ஒரு சில பொழுதில் கிட்டும்” (மணல், ப. 45) இவ்வாறு மழைக்காலங்களில், பொங்கிவரும் நீரோடு மிகுந்த மீன்வளம் கொண்ட ஆறாகவும் வைப்பாறு உருமாறும். “வெள்ளப்பெருக்கில் மீனோட்டம் வளமாய் ஏத்துப்படும். மணலை, உழுவை, கெழுத்தி என ஆத்து மீன் வகையறா” (மணல், ப. 53) வெறும் துணியை வைத்து அசைத்தாலே கரையில் மீன்கள் விழும் என்று புதினம் காட்சிப்படுத்துகிறது. மேலும் ஆற்றங்கரைகளில் விளைவிக்கும் காய்கறிகள், ஆற்றுநீரின் வளமையுடன் சுவையுற்று இருப்பதையும் புதினத்தில், “சுவையிலும் வாசனையிலும் சிலாக்கியமானவை வைப்பாறு ஆற்றுக் காய்கள்” (மணல், ப.157) எனக் கூறப்பட்டுள்ளது. இத்தகைய செழுமை மிக்க ஆறு, வைப்பாறு என்பதை ஆசிரியர் இங்ஙனம் பதிவுசெய்கின்றார்.

### மணலின் இன்றியமையாமை

ஆற்றுநீரின் சேமிப்புக்கலன், அதன் மணல்படுகை என்றால் அது மிகையாகாது. மண்ணின் துகள்களுக்கு இடையே உள்ள வெற்றிடங்கள், மழை நீரைச் சேமிக்கும் கிடங்குகளாகப் பயன்படுகின்றன. இத்தகைய ஆற்றல்சார் வளத்தின் முக்கியத்துவத்தை ‘மணல்’ புதின ஆசிரியர் பலவாறு எடுத்துரைக்கின்றார். “படுத்துக் கிடந்தால் மணல். விவசாயத்திற்கு நடந்தால் அது தண்ணீர், குடிநீர், விளைச்சல், தோட்டம் துரவு, காய் கனி, மலர் பூ, அருள்பாலிக்கும் அன்னை.” (மணல், ப. 104) வெறும் மணல்தானே என்று பலரெண்ணும் நிலையில், உயிரின வாழ்வில் அதன் பங்களிப்பு இத்தகையது என்பதை எடுத்துரைப்பதாய் இவ்வரிகள் அமைந்திருக்கின்றன. ‘ஓலமிடும் ஆற்றுமணல்’ நூலில், ப. திருமலை மணல்வளத் தேவையை வெளிப்படுத்தியுள்ளார். “இயற்கையாகவே மணல் பகுதிகள் பாக்டீரியாக்களை வடிகட்டும் திறன் கொண்டவை. மணல் குறைய குறைய வடிகட்டும் திறன் குறைந்து நீர் மாசுபட்டு நோய் பரவும் அபாயம் ஏற்படும்.” (ஓலமிடும் ஆற்றுமணல்) இக்கூற்று, மணலின் ஆக்கப்பூர்வச் செயல்பாட்டை வெளிக்காட்டும்வண்ணம் அமைந்திருக்கின்றது.

### கட்டுமானப் பொருளாகும் மணல்

சமகால அறிவியல் மற்றும் தொழில்துறை வளர்ச்சி யாவும் கட்டுமானப்பணியின்றி நடைபெறுவதில்லை. காலத்திற்கேற்ப ஆதிக்கசக்தியினர் எவ்வாறு வடிவெடுத்தாலும் கட்டுமானத் துறைக்கே முன்னுரிமை அளிக்கின்றனர். அன்றைய ஏகாதிபத்தியமாயினும் இன்றைய மக்களாட்சியாயினும் சர்வாதிகாரம் பெறுவது கட்டுமானத் துறையாகும். இத்துறையில் ஆற்றுமணலின் அதிகாரம் வரம்பற்றது. “கட்டுமானத் தொழிலில் மணல் ஒரு சர்வாதிகாரி. எல்லாவற்றையும் இயக்குவிக்கும் ஒரு விசை” (மணல், ப. 104) இங்கு, கட்டுமானத்தில் ஆற்றுமணலின் ஆட்சிமை புலப்படுகின்றது.

இவ்வாறே கட்டுமானத் துறையினால் ஏற்படும் இயற்கைவளச் சீர்கேடுகளை இடித்துரைக்கும் வகையில் ஆசிரியர், “கட்டுமானக் தொழிலில் சிமிண்டுக்குப் பாறைகளை உடைக்கிறார்கள். கிரானைட் கற்களுக்கு மலைகளைத் தகர்க்கிறார்கள். மணலுக்கு ஆற்றைச்

சுரண்டுகிறார்கள். கதவு, சன்னல்களுக்கு வனம் அழிக்கிறார்கள்'' (மணல், ப. 104) என ஒட்டுமொத்த இயற்கை ஆதாரங்களைச் சுரண்டி இக்கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆற்றுமணல் சுரண்டல்கள்

பஞ்ச பூதங்களில் ஒன்றான நிலவளம், இயற்கை நல்கிய கொடைகளுள் ஒன்று. மனிதர்கள் இவ்வளத்தைத் தங்களின் தேவைக்குப் பயன்படுத்துவதைவிட, ஒரு சிலரின் சுயலாபத்திற்காக மொத்தமாகச் சுரண்டியெடுக்கின்றனர். ஜெகாதா என்பவர், ''தமிழகத்தின் இயற்கை வளக்கொள்ளையில் மிக முக்கியமானது ஆற்றுமணல் கொள்ளை. மிக மிக அதிக லாபம் இருப்பதால் மணல் அள்ளுவதைத் தடுக்கும் காவல் மற்றும் வருவாய்த் துறையினரைக் கொலை செய்யக் கூட தயங்குவதில்லை மணல்கொள்ளையர்கள்'' (நிலம்-நீர்-காற்று-வனம், ப. 207) என்று நடப்பியல்பைப் புலப்படுத்தியுள்ளார்.

அவ்வாறே, வைப்பாற்றில் மணல்கொள்ளை பலவிதமாய் நிகழ்கின்றது. மணல்கொள்ளை செய்பவர்களை 'மணல்வாரியப்பன்கள்' என்று அழைப்பதைப் புதினத்தில் காணலாம். ''மணல் வாரின மாபாவிக சும்மா போனாங்களா? கெடங்கும் மேடுமா ஆக்கி வச்சிடாங்க...மணல்வாரியப்பன்கள் பண்ணின அக்கிரமத்தில நாங்களும் தெசைமாறிப் போயிட்டோம்.'' (மணல், ப. 26) இதைத்தவிர, ''இது வீரப்பன் வண்டி எவனும் ஒன்னும் பண்ணமுடியாது'' (மணல், ப. 27) என்பதில் செய்யும் திருட்டைப் பகீரங்கமாக எவருக்கும் அஞ்சாமல் மணல்கொள்ளையர்கள் செய்வதைக் காணமுடிகிறது. இதற்குமேலும் ஒருபடியேறி, ''மணல் திருடினாத்தான் குற்றம். திருட்டை அதிகாரப் பூர்வமாக ஆக்கிவிட்டால்...அரசு ஆணை வெளியிட்டு, அரசு அதிகாரத்துடன் மணல்குவாரி நடத்த முடிவெடுத்தனர்'' (மணல், ப. 66) என்று அரசின் அனுமதிபெற்று மணல்குவாரியை அமைக்கின்றனர். அரசின் அனுமதியுடன் மணல் அள்ளச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. ''குடிதண்ணீர் எடுக்கிற இடத்திலிருந்து, அதைச் சுற்றிய பகுதியில் 500 மீட்டர் தொலைவு மணல் எடுக்கக் கூடாது என்று சட்டத்தில் ஒரு பிரிவு இருக்கிறது'' (மணல், ப. 105) ஆயினும் மணல் கொள்ளைகள் இச்சட்டத்தை மீறுகின்றனர் என்று இப்புதினத்தில் வழக்கறிஞர் வாதாடுகின்றார். இவ்வாறு ஆற்றுமணல் கொள்ளை நிகழ்வுகள் பலவிதமாக அரங்கேறுதலைக் காணலாம்.

வைப்பாற்றின் சிதைவு

ஓர் ஆறு என்பது அனைத்து வகையான உயிரினங்களுக்கும் மூலாதாரம். வேளாண்மை, நிலத்தடிநீர் வளம், நிலவளச் செழுமை, நீர்வாழ் உயிரினங்களின் ஒட்டுமொத்த வாழ்வு போன்ற அனைத்தும் ஆற்றில் அடக்கம். இதனையறியாது மணல் என்னும் உயிர்ப்பொருளைக், கட்டுமானப் பொருளாக எண்ணி அதனை விரயமாக்குகின்றனர். அவ்வாறு செய்தபின் காணப்படும் ஆற்றின் நிலைமை மோசமானதாகும். 'மணல்' புதினத்தில் வைப்பாற்றை, ஆற்றுமணல் சுரண்டல்களால் உருக்குலைப்பதை ஆசிரியர் ஆழமாக வெளிப்படுத்தியுள்ளார். ''ஒரு கூட்டுப் பாலியல் வன்முறை போல் சிதைத்துப் போட்டார்கள் ஆற்றை. நீ அந்த இடம், நா இந்த இடம் என்று மூலவர்களுக்காக, ஆற்றை அறுத்துப் பங்கு போட்டார்கள்'' (மணல், பக். 80-81) இயற்கையைப் பெண்ணுடன் ஒப்புமைப்படுத்துவது தமிழர் மரபு. அவ்வாறே மணல் அள்ளுவதில் சிதிலமடையும் ஆற்றைப் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்ட பெண்ணுடன் ஆசிரியர் உருவகித்துள்ளார்.

தொடர் சுற்றுச்சூழல் பாதிப்புகள்

வரன்முறையற்ற இயற்கைவளச் சுரண்டல்கள், பெரும் ஆபத்தை விளைவிக்கக் கூடியன. இதனை உறுதிசெய்யும் விதமாய், வைப்பாற்றில் தொடர்ந்து மணலை அள்ளிக் கொண்டே செல்வதால் விளாத்திக்குளம் வட்டாரத்தில் உள்ள அனைத்து கிராமங்களும் பலவிதங்களில் பாதிப்படைவதை 'மணல்' புதினம் காட்டுகின்றது. சான்றாக, இரவும் பகலுமாக தொடர்ந்து மணல் அள்ளுவதால் சிங்கிலிப்பட்டி கிராமத்தின் சூழலமைவு பாதிக்கப்படுகிறது. ''ஊர் மேல் மணலும், புகையும், தூசியும் கவிந்தது. சிங்கிலிப்பட்டியின் நாசித்துவாரம் அடைத்தது. ஏகாதேசம் இரும ஆரம்பித்த சிலர், பிறகு நெஞ்சுவலி எடுக்க இருமி பக்கத்து நகர மருத்துவ மனைகள் தேட

ஆரம்பித்தனர்." (மணல், ப. 82) மணல் அள்ளுவதன் பின்விளைவுகளாக, மக்களின் உடல்நலம் பாதிக்கப்படைவதை இவ்வரிகளில் காணமுடிகின்றது.

இதைத்தவிர மணல், காற்றில் பறந்து, ஊர் மாசுபாடு அடைந்ததையும் ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார். "லாரிகள் ஏற்றிய மணல் ஊர் மேலாக்கப் பறந்து வீட்டு முற்றத்தில் அமர்ந்தது. முற்றத்தை, வீட்டைக் கூட்டிக் கூட்டித் தள்ளினாலும் மணல் விழுந்து கொண்டிருந்தது. பொதுச் சந்திப்புக்குக் கூட வாகான இடம் இல்லாமல் போனது." (மணல், ப. 82) தொடர்ந்து சரக்குந்துகள் சென்றுவருவதால், அனைத்து ஊர்களிலும் சரியான சாலைகள் இல்லாமல் அவை மேடுபள்ளமாக மாறிவிடுவதையும் 'மணல்' புதினம் காட்சிப்படுத்தியுள்ளது. இப்பள்ளங்களில் அகப்பட்டவர்கள் உயிரிழக்கும் அவலநிலையும் நேரிடுகின்றது. "கெடங்கும் மேடுமா ஆக்கி வச்சிட்டானுக. மழைக்காலத்தில் தண்ணி தேங்கி, அங்ஙன எறங்கி ஆறேழு உயிர காவு போயிடுச்சி...முத்துலாபுரத்துல தொடங்கி வேடபட்டி வரைக்கும் ஏழெட்டுப் பள்ளங்கள்." (மணல், ப. 26)

செல்லத்தாயி என்பவள் ஆற்றில் மணல் அள்ளிய இடத்தில் ஊறிவருகின்ற நீரைப் பிடிக்கச் செல்கிறாள். 20 அடி ஆழம்வரை தோண்டப்பட்ட பள்ளத்தில் குடத்தில் நீரெடுக்கும் பொழுது காலடிமண் சரிந்து அதில் மூழ்கி இறந்துவிடுகிறாள். "இருபக்கமும் கால்கள் பதித்து குனிந்து குடத்தில் கோரினாள் செல்லத்தாயி. குனிந்து தூக்கியவள் சட்டென்று காலடி மண் சரிய தேங்கிக்கிடந்த மழைநீர் பள்ளத்தில் சரிந்தாள். கனமான நீர்க்குடம் மேலே விழுந்து அழுத்த உள்ளே மறைந்தாள்." (மணல், ப. 208) சுயநலம் மட்டுமே எண்ணும் மணல்வாரி மனிதர்களால் செல்லத்தாயி போன்ற அப்பாவிகள் உயிரிழக்க நேரிடுகிறது.

கொள்ளைக்கெதிரான போராட்டம்

மணல் சுரண்டல்களால் பாதிக்கப்படும் சாமான்ய மக்கள், ஒரு கட்டத்திற்கு மேல் இக்கொடுமைகளைப் பொறுக்க முடியாமல் போராட்ட நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். முதலில் கொள்ளையடிப்பவர்களை நேரடியாகத் தடுத்துநிறுத்தும் முயற்சியாக, "பனையேறிகள், மேட்டுப்பட்டி இளவட்டங்களோடு சரசரவென்று ஆற்றினுள் இறங்கி மறித்தார்கள். திடீர்த் தாக்குதலை தொழிலாளர்கள் நினைத்துப் பார்க்கவில்லை. தொழிலாளர்கள் கைவசமிருந்த மண்வெட்டி, கடப்பாறை, கோணிப்பைகளைப் பறித்தார்கள்." (மணல், ப. 32) ஆனாலும் மணல்கொள்ளையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதனால் பொதுமக்கள், நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். காங்கேயன் என்பவர் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று மணல் அள்ளுவதற்கு எதிர்த்து வழக்கிட்டு வெற்றிபெறுகிறார். "தண்ணீர் எடுக்க வசதியாக ஆற்றில் கிணறுகள். ஒவ்வொரு கிணற்றையும் சுற்றி 500 மீட்டர் சுற்றளவுக்கு மணல் எடுக்கக் கூடாது." (மணல், ப. 106) என்ற உத்தரவு பிறப்பிக்கப்படுகின்றது. நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பின்பும் மணல்கொள்ளை தொடர்வதால் மணல்கொள்ளையர்களின் வாகனங்களைக் கையகப்படுத்தி ஆற்றில் அமர்ந்துப் போராட்டம் செய்கின்றனர். பெரியவர் துரைகண்ணுவின் பேரன் மாறன் என்பவன் மணல்கொள்ளைக்கு எதிரான இப்போராட்டத்தில் முன்னின்று மணல்கொள்ளையர்களைப் பிடிக்கின்றான். இதனால் பழிதீர்க்கக் காத்திருக்கும் கொள்ளையர்கள் அவனைக் கொன்று, அதனை விபத்து போல மாற்றிவிடுகின்றனர். மணல் என்னும் நிலைப்பொருளை வணிகப்பொருளாக மாற்றியதன் விளைவே இவ்வுயிர்ப்பலிகள் என்று ஆசிரியர் கூறுகின்றார்,

முடிவுரை

மனிதர்கள், தங்களின் சுயலாபத்தை மட்டுமே எண்ணி இயற்கைவளங்களை ஆட்கொள்ள முயற்சிக்கும் செயல்பாடுகளில், நியாயதர்மங்களை மறக்கின்றனர். மணல் வளத்தை ஒட்டுமொத்தமாக அபகரிக்கும் பேராவலில், உயிர்வதை செய்யவும் துணிகின்றனர். ஆற்றின் மொத்தநீரை உறிஞ்சிய பின்பும் தாகம் அடங்காமல் தொடர்ந்து மணல்கொள்ளைகள் இன்றளவும் நடைபெற்று வருகின்றன. 'மணல்' புதினம், இத்தகைய நிகழ்வுகளைப் புனைவின்றிச் சமூக நடப்பியல்பாகப் பதிவுசெய்துள்ளது. மேலும் ஆற்றுநீரின் பயன்பாட்டையும் அதன் முக்கியத்துவத்தையும் புலப்படுத்துகின்றது. அடுத்த சந்ததியினருக்கு நீரைப் பகிர்ந்தளிப்பதில் அட்சயபாத்திரமாக விளங்கும் மணலின் பாதுகாப்பை வலியுறுத்துகின்றது.

இவ்வாறு 'மணல்' புதினம் வெளிக்காட்டும் மணல் சார்ந்த சிந்தனைகளையும் வைப்பாற்றின் சிதைவையும் எடுத்துக்காட்டுவதாய் இக்கட்டுரை அமைந்துள்ளது.

குறிப்புநூல் பட்டியல்


1. இராசமாணிக்கம், மா. *ஆற்றங்கரை நாகரிகம்.* ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக வெளியீடு. முதற்பதிப்பு - 1957
2. துரைச்சாமி பிள்ளை ஔவை சு. (உ. ஆ.) *ஐங்குறுநூறு – மூலமும் உரையும்.* அண்ணாமலை பல்கலைக்கழக வெளியீடு, முதற்பதிப்பு - 1957
3. செயப்பிரகாசம், பா. *மணல்.* நூல்வனம்.சென்னை. முதற்பதிப்பு - 2019
4. புலியூர்க்கேசிகன் (உ. ஆ.) *கலித்தொகை – மூலமும் உரையும்.* சாரதா பதிப்பகம். சென்னை. முதல்பதிப்பு - 2010
5. திருமலை, ப. *ஓலமிடும் ஆற்றுமணல்.* (மின்னூல்) கிண்டில் பதிப்பு.
6. நாகராசன், வி. (உ. ஆ.) *குறுந்தொகை - மூலமும் உரையும்.* நியூ சென்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட். சென்னை. முதல்பதிப்பு - 2004
7. ஜெகாதா. *நிலம்-நீர்-காற்று-வனம்.* நேஷனல் பப்ளிஷர்ஸ். சென்னை. முதற்பதிப்பு - 2021


********* ********* ********** ********* ********* ********** ********** **********